புகையையும் கண்காணிக்கும் திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் இயங்குகிற மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். மாவட்ட வாரியாக மாசுக் கட்டுப்பாடு வாரியக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆக, ஊராட்சி வாரியாக இருக்கக்கூடிய குறைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்தந்தப் பகுதிகளில் ஊராட்சி வாரியாக "அம்மா குறை தீர்ப்பு முகாம்" நடைபெறுகிறபோது, அப்பகுதியிலுள்ள குறைகளை மனுக்களாகத் தருகின்றபோது, அந்த மனுக்கள் மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு அனுப்பப்பட்டு அந்தத் துறையினுடைய அதிகாரிகளின் மூலமாக குறைகளைக் கண்காணிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 329, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

329—

மருத்துவமனைக் கட்டடம்

***50561**—**திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 2,000 படுக்கை வசதி ஏற்படுத்தவும், இதய நோய் சிகிச்சைப் பிரிவிற்குப் புதிய கட்டடங்கள் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

2014 ஆகஸ்ட் 4]

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தற்போது 1,536 படுக்கை வசதிகளுடன் சிறப்பான முறையில் திருநெல்வேலி மாவட்ட மக்களுக்கு மருத்துவ சேவையாற்றி வருகிறது. இம்மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதயவியல் துறை 8 படுக்கை வசதிகளுடன் தேவையான மருத்துவ உபகரணங்கள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடன் சிறப்பான முறையிலே இயங்கி வருகிறது. மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ள படுக்கை வசதிகள் உள்நோயாளிகளுக்குத் தற்போது போதுமான அளவிற்கு இருந்தாலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணைப்படி தற்போது 280 கூடுதல் படுக்கை வசதிகள் கொண்ட புதிய கட்டடங்களை ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜீவ நதியாய் வருவார்; தாகம் தீர்த்து மகிழ்வார்; தவறினைப் பொறுப்பார்; தருமத்தை வளர்ப்பார்; அவர்தான் அன்னை மகாசக்தி; (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மகாசக்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 150 கோடி ரூபாய் செலவில் சூப்பர் ஸ்பெசாலிட்டி மருத்துவமனையைத் தந்தமைக்கும், மேலும் 15 கோடி ரூபாய் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிற்கு தந்தமைக்கும் தென்மாவட்ட மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை நான் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-40

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் 2003 ஆம் ஆண்டு மாணவர்கள் சேர்க்கை 100 ஆக இருந்ததை 150 மாணவர்களாக நிலை உயர்த்தித் தந்தார்கள். அதற்கு 30 கோடி ரூபாய் செலவிலே கட்டடமும் கட்டி அனுமதியும் தந்தார்கள். 26-9-1965 அன்று

[2014 ஆகஸ்ட் 4

ஆரம்பிக்கப்பட்ட திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்த பிறகுதான் இவ்வளவு பெரிய நிலையை உயர்த்தித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சபைக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பொன்விழா ஆண்டை நோக்கி நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலே 1,893 படுக்கைகளைக் கொண்டதாக இன்றைக்கு நிலை உயர்த்தித் தந்திருக்கின்றார்கள். அதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்கிறேன். இந்தப் பிரச்சினை குறித்து அனைத்து எதிர்க்கட்சிகளும் அறிவிப்புக் கொடுத்திருக்கின்றீர்கள். இந்தப் பிரச்சினையைப் பொறுத்த அளவில் அனைத்து எதிர்க் கட்சிகளும் ஒற்றுமையாக, ஒருமித்த கருத்துகளுடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பின் நின்று, ஒத்த கருத்தைத் தெரிவித்ததன் அடிப்படையில், தமிழகத்தின் ஒட்டுமொத்தக் கட்சிகளின் எதிர்ப்புக்குப் பணிந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் இலங்கை அரசு மன்னிப்புக் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் இது குறித்து மேலும் விவாதம் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*